செ.வெ.எண்.14 நாள்: 07.05.2020

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி பகுதியில் ஏழை எளிய மக்கள், சுமை தூக்கும் தொழிலாளிகள், லோடு ஆட்டோ, வேன் ஓட்டுநர், கார் ஒட்டுநர்கள், புகைப்பட கலைஞர்கள், பந்தல் தொழிலாளர்கள், கலை குழுவினர்கள் என மொத்தம் 2900 நபர்களுக்கு மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜூ அவர்கள் அரிசி, பருப்பு, மளிகை பொருட்கள் மற்றும் காய்கறிகள் அடங்கிய பைகள் ஆகியவற்றை வழங்கினார்.

---

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி பகுதியில் உள்ள ஏழை எளிய மக்கள், சுமை தூக்கும் தொழிலாளிகள், லோடு ஆட்டோ, வேன் ஓட்டுநர், கார் ஒட்டுநர்கள், புகைப்பட கலைஞர்கள், பந்தல் தொழிலாளர்கள், கலை குழுவினர் ஆகியோர்களுக்கு அரிசி, பருப்பு, மளிகை பொருட்கள் மற்றும் காய்கறிகள் அடங்கிய பைகள் வழங்கும் நிகழ்ச்சி இன்று (07.05.2020) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ. ராஜூ அவர்கள் கலந்து கொண்டு ஏழை, எளிய மக்கள், சுமை தூக்கும் தொழிலாளிகள், லோடு ஆட்டோ, வேன் ஓட்டுநர், கார் ஒட்டுநர்கள், புகைப்பட கலைஞர்கள் பந்தல் தொழிலாளர்கள், கலை குழுவினர்கள் என மொத்தம் 1900 நபர்களுக்கு அரிசி, பருப்பு, மளிகை பொருட்கள் மற்றும் காய்கறிகள் அடங்கிய பைகள் வழங்கினார். மேலும் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ. ராஜூ அவர்கள் பாண்டவர்மங்கலம் ஊராட்சி காமராஜர் நகர் பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கோவில்பட்டி ஊராட்சி ஒன்றிய குழு துணைத்தலைவர் திரு.பழனிசாமி அவர்கள் ஏற்பாட்டில் ஏழை, எளிய மக்களுக்கு அரிசி, காய்கறிகள் அடங்கிய பைகளையும், ஸ்பிக் நிறுவனத்தின் மூலம் 1000 நபர்களுக்கு 10 கிலோ அரிசி, 1 கிலோ பருப்பு மற்றும் 1லிட்டர் எண்ணெய் ஆகியவற்றையும் வழங்கினார். மேலும் 40 தவழும் மாற்றுத்திறனாளிகளுக்கு பாதுகாப்பு முகவசங்கள், கையுறை ஆகியவற்றையும் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலை வகித்தார்.

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

Covid 19 என்ற கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க உலக சுகாதார அமைப்பு மக்கள் தங்களை தனிமைப்படுத்தி கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளது. இந்தியாவில் கடந்த மார்ச் 23 முதல் சுய ஊரடங்கு உத்தரவு கடைபிடிக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட தொடர் நடவடிக்கையால் கொரோனா தொற்று நோய் பரவுதை கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் கொரோனா தொற்று நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று குணமடைந்தவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. சுய ஊரடங்கு கடைபிடிக்கும் நேரத்தில் பொதுமக்களின் பொருளாதாரம் பாதிப்பு அடையக் கூடாது என்பதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் உள்ள 2 ¼ கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு ஏப்ரல் மாதத்திற்கான ரேசன் பொருட்கள் விலையில்லமாலும், கொரோனா நிவாராண தொகையாக ரூ.1000/- வழங்கப்படும் என அறிவித்தார்கள். அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு ஏப்ரல் மாதத்திற்கான ரேசன் பொருட்கள் மற்றும் கொரோனா நிவாராண தொகை வழங்கப்பட்டது. மேலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மே மற்றும் ஜூன் மாதத்திற்கான

ரேசன் பொருள்கள் விலையில்லாமல் வழங்கப்படும் என அறிவித்திருந்தார்கள். நமது மாவட்டத்திலும் மே மாதத்திற்கான ரேசன் பொருட்கள் விலையில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது. நாள்தோறும் உழைக்கும் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் உள்ள 83 லட்சம் அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு கொரோனா நிவாரண தொகையாக தலா ரூ.1000/- வீதம் ரூ.83 கோடி கொரோனா நிவாரண தொகை வழங்கப்பட்டுள்ளது. மேலும் 1,778 தீப்பெட்டி தொழிற்சாலைகளில் பணியாற்றும் 21,770 தொழிலாளர்களுக்கு நிவாரண தொகை ரூ.1000/- வழங்கப்பட்டுள்ளது. ஓய்வுயின்றி உழைக்கும் பத்திரிக்கையாளர்களின் நலன் கருதி கொரோனா நிவாரண தொகை ரூ.3000/- வழங்கப்படுகிறது. தூத்துக்குடி மாவட்டத்தில் அமைப்புசார தொழிலாளர்கள் 96,999 நபர்களுக்கு கொரோனா நிவாரண தொகை ரூ.1000/- வழங்கப்பட்டுள்ளது. மேலும் 19,512 மீனவர்களுக்கு மீன்பிடி தடைக்காலம் நிவாரண தொகையாக ரூ.5,000/- மற்றும் 19,492 மீனவர்களுக்கு மீன்பிடி குறைந்த காலம் நிவாரணமாக ரூ.5,000/- என மொத்தம் 40,000 மீனவர்களுக்கு நிவாரண தொகை வழங்கப்பட்டுள்ளது. மேலும் 46,449 மீனவர்களுக்கு மீனவர் நல வாரியத்தின் மூலம் ரூ.1000/- நிவாரண தொகை வழங்கப்பட்டுள்ளது. மேலும் நமது மாவட்டத்தில் உள்ள கட்டுமான தொழிலாளர்கள், ஓட்டுநர்கள், முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள், தூய்மை பணியாளர்கள் உள்ளிட்ட நபர்களுக்கு அரிசி, பருப்பு, காய்கறிகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. இன்று கோவில்பட்டி பகுதியில் உள்ள சுமார் 2900 ஏழை எளிய மக்கள், சுமை தூக்கும் தொழிலாளிகள், லோடு ஆட்டோ, வேன் ஓட்டுநர், கார் ஒட்டுநர்கள், புகைப்பட கலைஞர்கள் பந்தல் தொழிலாளர்கள், கலை குழுவினர் ஆகியவர்களுக்கு அரிசி, பருப்பு, மளிகை பொருட்கள் மற்றும் காய்கறிகள் அடங்கிய பைகள் வழங்கப்பட்டது. மேலும் ஸ்பிக் நிறுவனத்தின் மூலம் 1000 நபர்களுக்கு 5 கிலோ அரிசி, மளிகை பொருட்கள் மற்றும் எண்ணெய் மற்றும் 40 தவழும் மாற்றுத்திறனாளிகளுக்கு பாதுகாப்பு முகவசங்கள், கையுறை ஆகியவற்றை வழங்கும் பணிகள் துவக்கி வைக்கப்பட்டது. நமது மாவட்டத்தில் 300 மாற்றுத்திறனாளிகளுக்கு பாதுகாப்பு முகவசங்கள், கையுறை ஆகியவை வழங்கப்படவுள்ளது.

தூத்துக்குடி மாவட்டத்தில் 4,940 நபர்கள் கொரோனா தொற்று நோய் பரிசோதனை செய்ததில் 27 நபர்களுக்கு கொரோனா தொற்று நோய் உறுதி செய்யப்பட்டிருந்தது இதில் 26 நபர்கள் பூரண நலம் பெற்று வீடு திரும்பியுள்ளார்கள். ஒரு நபர் சிகிச்சை பலனின்றி உயிர்யிழந்துள்ளார். கடந்த 17 நாட்களாக கொரோனா தொற்று நோய் நமது மாவட்டத்தில் இல்லையென்ற நிலையில் இருந்தது. நேற்றைய தினம் 2 நபர்களுக்கு கொரோனா தொற்று நோய் உறுதி செய்யப்பட்டது. இதில் ஒரு நபர் லாரி டிரைவர் வெளிமாநிலத்திற்கு சென்று வந்தவர். மேலும் ஒரு நபர் வெளி மாவட்டத்திலிருந்து அனுமதி பெறாமல் நமது மாவட்டத்திற்கு வருகை வந்தவராக உள்ளார். சென்னை அல்லது வெளிமாநிலத்திலிருந்து நமது மாவட்டத்திற்கு வருகை தரும் நபர்களை கண்டறிந்து பரிசோதனை செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது. குறிப்பாக பிரதான சாலையில் 15 காவல் துறையின் சோதனை சாவடிகள் அமைக்கப்பட்டு கண்காணிக்கும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. அதே போல் குறுக்குசாலைகளில் 45 இடங்களில் சோதனை சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளது. வெளி மாவட்டம் அல்லது வெளி மாநிலத்திலிருந்து வருகை தரும் நபர்களை 28 நாட்கள் தனிமைப்படுத்தப்படுகிறது. மேலும் அவர்களுக்கு கொரோனா தொற்று நோய் பரிசோதனையும் செய்யப்படும் பொதுமக்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொலைக்காட்சியின் மூலம் உரையாற்றினார்கள். அப்போது மக்கள் சுய கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டுமெனவும் முக கவசங்கள் அணிய வேண்டுமெனவும் சமூக இடைவெளியை கடைபிடிக்க வேண்டுமெனவும் வணங்கி தெரிவித்து வருகிறார்கள்.

அரசு கொரோனா தொற்று நோய் பரவலை தடுக்க பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டு வந்ததாலும் விழிப்புணர்வுடன் இருக்கும் பட்சத்தில் கொரோனா தொற்று நோய் பரவாமல் தடுக்க முடியும். அத்தியாவசிய பொருட்கள் வாங்குவதற்கு மட்டுமே பொதுமக்கள் வீட்டிலிருந்து வெளிவர வேண்டும். அரசு தெரிவிக்கும் விதிமுறைகளை பொதுமக்கள் முழுமையாக பின்பற்றுவதோடு முழு ஒத்தழைப்பு அளிக்க வேண்டுமென தெரிவித்தார்கள்.

முன்னதாக கோவில்பட்டி புள்ளியன் சங்கத்தின் சார்பில் ரூ.1 லட்சத்திற்கான காசோலையினையும், கோவில்பட்டி குருசாமி நாடார் & சன்ஸ் சார்பில் ரூ.25 ஆயிரம் காசோலையினையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கொரோனா தடுப்பு பணிகளுக்கு மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜூ அவர்களிடம் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் கோவில்பட்டி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.விஜயா, கோவில்பட்டி ஒன்றிய குழு தலைவர் திருமதி.கஸ்தூரி சுப்புராஜ், துணைத்தலைவர் திரு.பழனிசாமி, கோவில்பட்டி நகராட்சி ஆணையாளர் திரு.ராஜாராம், கோவில்பட்டி வட்டாட்சியர் திரு.மணிகண்டன், வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.சந்திரசேகர், மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளர் (கோவில்பட்டி) திரு.ஜெபராஜ், மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் திரு.பிரம்மநாயகம், வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி.வசந்தா, ஸ்பிக் நிறுவனத்தின் முழு நேர இயக்குநர் திரு.ராமகிருஷ்ணன், மக்கள் தொடர்பு அலுவலர் திருமதி.அமிர்த கௌரி, முதுநிலை மேலாளர் (நிர்வாகம்) திரு.ஜெயபிரகாஷ், லைன்ஸ் கிளப் கோவில்பட்டி தலைவர் டாக்டர்.பிரான்ஸிஸ் ரவி, செயலாளர் திரு.ராமசாமி, பொருளாளர் திரு.சீனிவாசன், முக்கிய பிரமுகர்கள் திரு.அய்யா துரைபாண்டியன், திரு.விஜயபாண்டியன், திரு.சுப்புராஜ், திரு.மகேஷ்குமார், திரு.வண்டலாம் கருப்பசாமி, மற்றும் அலுவலர்கள் முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.